## சப்தரிஷி ஸ்தலம்

ஒரு இஸ்லாமியர் கேட்ட வினாவில் ஒரு ஊர் அமைந்துவிட்டது. அவன் கேட்ட கேள்வி "ஓ லால் குடி க்யா ஹை?" அவன் எதைப்பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்டான்?

ஒரு சமயம், மாலிக்காபூர் பல இடங்களில் படையெடுத்தப்பின், தமிழகத்திற்கும் வந்தான். திருச்சி அருகில் வரும் போது ஒரு கோயிலைச் செப்பனிட்டு அதன் சுற்றுச் சுவரில் சிவப்பு கலர் பூசப்பட்டிருந்தது. அப்போதுதான் அவன் இந்தக் கேள்வியைக் கேட்டான். "அது என்ன சிவப்பு கோயில்?" என்று ........

அவன் கேட்ட வினாவே அந்த ஊரின் பெயராக மாறி லால்குடி என்று அழைக்கப்பட்டது. இதன் முதல் பெயர் திருத்தவத்துறை. இதைச் சப்தரிஷி ஸ்தலம் என்றும் அழைக்கின்றனர். கௌதமர், புலச்தியர், வசிஹ்ச்டர், மாரீசி, ஆங்கிரசர், பிருகு, அத்ரி என ஏழு ரிஷிகள் இங்கு வந்து தவம் இயற்றினராம் பின் ஜோதியுடன் ஐக்கியமாகிவிட்டனராம் ஆகையால், இந்த சிவலிங்கத்தில் ஏழு பள்ளங்கள் காணப்படுகின்றன.

அம்பாளின் பெயர் சிவகாமசுந்தரி. பெயருக்கேற்ப சுந்தரவதனியாய் நம்மைக் கவருகிறாள். மணக்கோலத்தில் இருக்கும் அந்த அன்னை நம் மனதிலும் புகுந்து நம்மை ஆட்கொள்கிறாள். முகத்தில் நாணம் கலந்த புன்னகை ஆபரண பூஷணியாக இருக்கும் இந்த அம்பாளைத்தொழுதால், திருமணம் நடக்குமாம்.

நவக்கிரஹங்களையும் வித்தியாசமான அமைப்பில் இங்கு பார்க்க முடிகிறது. அதாவது சூரியனைப் பார்த்தே மற்ற கிரஹங்கள் உள்ளன. இங்கு இருக்கும் சப்தரிஷிகளைப் பூஜித்தாலும் திருமணத்தடை நீங்கிவிடுகிறதாம்.

இங்கு இருக்கும் தக்ஷிணாமூர்த்தியும் நின்றகோலத்தில் கையில் வீணை மீட்டியபடி இசைநாயகனாக விளங்குகிறார். கலையில் முன்னேறவும் குருவின் அருளைப் பெறவும் இங்கு பலர் வந்து குருவைப் பூஜிக்கின்றனர்.

தில்லையம்பல நடராஜாவும் இங்கு அருள் புரிகிறார் திருவாதிரை, மாசிமகம், பங்குனி பிருமோத்சவம் தைபூசம், சித்திரைப்பெருவிழா என இங்கு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இந்த இடம் திருச்சியிலிருந்து 18 கிமீ தூரத்தில் இருக்கிறது.

ஓம் நமசிவாய

**கோயில்கள் சொல்லும் தத்துவங்கள்**

கோயிலுக்குச் செல்கிறபோது இறைவனின் அருளை வேண்டுகிறோம். அங்குள்ள சிற்பங்களின் அழகில் மயங்குகிறோம். ஆனால் ஆலய அமைப்பு முறையில் ஓர் அற்புதமான தத்துவம் இருப்பதை எல்லோரும் அறிவதில்லை.

கடவுளை மட்டுமல்ல, அவன் உறையும் கோயிலைக் கூட மனிதனைப் போலவே அமைத்திருக்கிறார்கள் முன்னோர்கள். .

**'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாயில்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே**

என்பது திருமூலர் அருட்பாடல்.

அவர் உடலே கோயில் என்றார். உடம்பே கோயிலாய் எழுந்துள்ளது என்பதை 'க்ஷேத்திரம் சரீரப் பிரஸ்தாரம்' என்கிறது ஆகமச் சொற்றொடர்.

உடம்பில் பாதங்கள் கோபுரமாகவும், முழங்கால் ஆஸ்தான மண்டபமாகவும், தொடை நிருத்த மண்டபமாகவும், கொப்பூழ் (தொப்புள்) பலி பீடமாகவும், மார்பு மகாமண்டபமாகவும், கழுத்து அர்த்த மண்டபமாகவும், சிரம் (தலை) கருவறையாகவும் கோயிலாய் எழுந்துள்ளது என்பது ஆகம மரபு.

கோயில் அமைப்பில், உடலில் அன்னமய கோசம், பிரணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்த மய கோசம் ஆகிய ஐந்து உள்ளது போல கோயிலில் ஐந்து பிரகாரங்கள் உள்ளன.

தூல சரீரம், சூட்சும சரீரம், குண சரீரம், அஞ்சுக சரீரம், காரண சரீரம் போல ஐந்து சபைகள் உள்ளன.

உடலில் உள்ள மூலாதாரம் முதலான ஆறு ஆதாரங்கள் போலக் கருவறை, அர்த்த மண்டபம் முதலான ஆறு நிலைகள் உள்ளன.

கருவறை சிரமெனப்பட்டது. அதில் வலச்செவி தட்சிணாமூர்த்தி, இடச்செவி சண்டிகேசுவரர், புருவமத்தி லிங்கம், மூக்கு ஸ்தபந மண்டபம், வாய் ஸ்தபந

மண்டப வாசல், கழுத்து நந்தி தலையின் உச்சி விமானம் என்று ஆகம சாத்திரம் தெரிவிக்கிறது.

ஆகம விதிப்படி ஆலயங்கள் கருவறை, ஒன்று முதல் ஐந்து பிரகாரங்களுடன் கூடிய ராஜகோபுரம், பலி பீடம், கொடிமரம், யாகசாலை, நந்தி முதலியவற்றுடன் விளங்கும்.

மேலும் நம் உடல் தோல், இரத்தம், நரம்பு போன்ற ஏழு வகை தாதுக்களால் ஆனது போல் ஆலயமும் செங்கல், காரை, கல், போன்ற ஏழு வகையான பொருள்களால் ஆனது என்கிறது நமது சாத்தி ரங்கள்

கோயில் என்பதை கோஇஇல் எனப் பிரித்து 'கோ' என்றால் இறைவன். இல் என்றால் இருப்பிடம் என்கிறார்கள். ஆக, கோயில் என்பது இறைவனின் இருப்பிடம் என்றும் ஆலயம் என்பதை 'ஆ' ஆன்மா என்றும் லயம் சேருமிடம் என்றும் பொருள்படுகிறது.

மனிதனின் வடிவமாகச் சிவாலயத்தை ஒப்பிடும்போது (1) கருவறை இ தலை, (2) அர்த்த மண்டபம் இ கழுத்து, (3) மகா மண்டபம் இ மார்பு, (4) யாகசாலை இ நாடி, (5) கோபுரம் இ பாதம் என்றும் கூறுவர்.

அதே போல் (1) ஆலயம் - உடல், (2) கோபுரம் - வாய், (3) நந்தி - நாக்கு, (4) துவஜஸ்தம்பம் (கொடிமரம்) - உள்நாக்கு, (5) தீபங்கள் - பஞ்சேந்திரியங்கள், (6) கருவறை - இதயம், (7) சிவலிங்கம் - உயிர் என்றும் கூறுவர்.

**கோபுரம்** :

கோயில் வாசலில் அமைக்கப்படும் கோபுரமே மற்ற கோபுரங்களை விட உயரமாக இருக்கும்.இதற்கு ராஜகோபுரம் என்று பெயர்.நெடுந்தொலைவிலிருந்து பார்த்தாலே இது கம்பீரமாகத் தெரியும்.இதை ஒரு லிங்கமாக எண்ணி வணங்குவதும் உண்டு.இதனை ஸ்தூல லிங்கம் என்பது ஐதீகம். இதையும் தெய்வ உருவமாக எண்ணி வணங்குவது நம் வழக்கம்.'கோபுர தரிசனம் பாப விமோசனம்' என்பது பழமொழி.

கோபுரத்தில் தேவகணங்கள், தெய்வ உருவங்கள், பறவைகள், விலங்குகள், புராண, இதிகாசக்காட்சிகள், மனிதர்கள், தேவியர்கள், மெய்யடியார்கள் எனப் பலவகை சிற்பங்கள் இருக்கும். உலகில் பிரபஞ்ச அமைப்பில் எல்லாவற்றுக்கும்

இடமுண்டு.சிற்றுயிர்கள், பேருயிர்கள், விலங்குகள், மனிதர்கள், தேவர்கள் எல்லோரும் பிரபஞ்சத்தில் உள்ளனர்.அதிலும் இது உண்டு இ இது எல்லை என்ற பாகுபாடே கிடையாது என்பதை அவை விளக்குகிறது.

ராஜகோபுரத்தின் மேல் நிலைகள் பொதுவாக ஒற்றைப்படை எண்ணில் அமைந்திருக்கும்.அவை மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று என்பனவாகயிருக்கும். மூன்று நிலைகள் இ ஜாக்கிரத், ஸ்வப்பன, சுஷுப்தி என்பவற்றைக் குறிக்கும். ஐந்து நிலைகள் இ ஐம்பொறிகளைக்குறிக்கும்.ஏழு நிலைகள்இ ஐம்பொறிகளோடு மனம், புத்தி என இரண்டும் சேரும். ஒன்பது நிலைகள் இ அந்த ஏழினொடு சித்தம், அங்காரம் என இரண்டும் சேரும்.

பஞ்சேந்திரியங்களைக் கொண்டும் மனம், புத்தி முதலியவைகளைக் கொண்டும் புறவுலகை அறிகிறோம். புறவுலகை அறிகிற செயலை அப்படியே நிறுத்திவிட்டு, மனைத்துணையாகக் கொண்டு பரம்பொருளிடத்துப் பயணம் போக வேண்டும் என்கிற கோட்பாட்டையே ராஜகோபுர வாசல் பிரவேசம் நமக்கு உணர்த்துகிறது.

**பலிபீடம்** :

ராஜகோபுரத்தை அடுத்துள்ளது பலிபீடம். அதன் அருகில் சென்று வீழ்ந்து வணங்கும்போது பக்தன் மனதில் எழும் எண்ணமே மிக முக்கியமானது. அங்கு அவனது கீழான எண்ணங்கள், இச்சைகள் அனைத்தும் வணங்கும்போது பலிபீடத்தில் பலி கொடுக்கப்படுகிறது.அப்படி பலியிட்ட பின் தூய சிந்தனை, மேலான எண்ணத்துடன் அவன் எழ வேண்டும். அப்பொழுது மனிதத்தன்மை வாய்ந்த மனிதன் எழுந்திருக்கிறான் என்ற எண்ணம் வலுப்படும்.அந்த எண்ணத்தின் சக்தி, அவனைப் புதியபிறவி எடுக்க வைப்பதற்குச் சமமானது.

**கொடிமரம்** :

பலிபீடத்தை அடுத்துள்ளது கொடிமரம். இதை வடமொழியில் துவஜஸ்தம்பம் என்கின்றனர். இது உயரமாக இருக்கும். நந்தி இதற்கு முன்போ பின்போ அமைக்கப்பட்டிருக்கும். கொடிமரம், பலிபீடம், நந்தி ஆகியன ஒரே நேர் கோட்டில் மூலவரை நோக்கி இருக்கும்.

கொடிமரம் நேராக உள்ளது போல் உடல் நேராக இருக்க வேண்டும் என்பது சாத்திரம். இதன் உயரம் மூலவரின் விமானத்திற்குச் சமமாகவோ அல்லது மண்டபங்களின் மேல் தளத்திற்குச் சமமாகவோ இருக்கும்.இதன் அதி தேவதை

சிவன்.அதுவே சிவனைக் குறிப்பதாக உள்ளது.

இது மூன்று பாகமாகவுள்ளது. முதல் பாகம் சதுரமானது. அடிப்பகுதி இது பிரம்மாவையும், இரண்டாவது பாகம் எண் கோணவேதி அமைப்பு. இது விஷ்ணுவையும், மூன்றாவது பாகம் உருளை போன்றதடித்த உயரமான மேல் பகுதி ருத்ரனையும் குறிக்கும் என்கிறது ஆகமங்கள்.

உச்சியில் உள்ள மூன்று குறுக்குக்கட்டைகள்இ இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தியைக் குறிக்கின்றன. அதிலுள்ள இரு குறுக்குத்தண்டுகள் சூரிய, சந்திரனைக் குறிக்கின்றன.

விழாக்காலங்களில் கொடி ஏற்றம் நடைபெறும்.அதில் கொடிக்கயிறு அனுக்கிரக சக்தியையும், கொடிஇவாயுவையும், கொடியில் வரையப்பட்டுள்ள நந்திஇ நந்தி பகவானையும் குறிக்கிறது.

இந்தக் கொடிமரத்தடியில்தான் கீழே விழுந்து வணங்க வேண்டும். ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்யலாம். அஷ்டாங்கம் என்பது தலை, கைகள், காதுகள், முழங்கால்கள் ஆகிய ஒன்பதும் தரையில்படுமாறு விழுந்து வணங்குதல், பஞ்சாங்கம் என்பது கைகள், முழங்கால்கள், தலை ஆகிய ஐந்தும் தரையில் படுமாறு குனிந்து வணங்குதல்.

கொடிமரத்தின் முன் மும்முறை விழுந்து வணங்க வேண்டும்.அதற்குக் குறையக் கூடாது.கிழக்கு நோக்கிய சந்நிதி எனில் வடக்கில் தலைவைத்துத் தெற்கில் கால் நீட்டி வணங்க வேண்டும். வடக்கில் சந்நிதி எனில் கிழக்கே தலை வைத்து வணங்க வேண்டும்.

**யாக சாலை :**

இது ஒரு தத்துவ வடிவமாகவும், சிவனது 9 மூர்த்த வடிவாகவும் கூறப்படுகிறது. யாசசாலையில் 9 குண்டங்களில் அக்னி வளர்க்கப்படும். அவை நாற்கோணம், முக்கோணம், அர்த்தசந்திரம் முதலான வடிவங்களில் காணப்படும். குண்டங்களைச் சுற்றிப் பசுந்தர்ப்பைகளைப் பரப்பி ஆல், அரசு முதலான சமித்துகளைக் குண்டத்தில் இட்டு அக்னி வளர்த்து மந்திரங்களைச் சொல்லி தெய்வங்களை தியானித்து, சிருக்கு, சிருவம் என்ற கருவிகளால் நெய் ஊற்றி, மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றாலும் வழிபாடு நடக்கும். ஓமகுண்டப் புகை அருட் சக்தியைத் தூண்டி உலகெங்கும் பரவச் செய்யும் என்பதும் ஐதீகம்.

**நந்தி :**

கருவறையிலுள்ள சிவனை நோக்கி இருப்பது நந்தி. இது சிவனின் வாகனம்.சிவன் பரமாத்மா என்றால் நந்தி ஜீவாத்மா. பரமாத்மாவை நோக்கி அதில் கலக்கவே ஜீவாத்மா அதை நோக்கியுள்ளது. கோயிலுக்குச் செல்வோர் நந்திக்கும், சிவனுக்கும் குறுக்கே செல்லலாகாது.

கோயிலுக்குள் போகும்போது நந்தி தேவனை வழிபட்ட பின்னரே உள்ளே உள்ள சந்நிதிகலுக்குள் செல்ல வேண்டும்.

**பிராகாரம் :**

கோயிலில் வழிபடுவோர் மூன்று முறை அல்லது ஐந்து முறை பிரகாரங்களை வலம் வர வேண்டும். மூவகை உடம்பையும், ஐந்து வித கோசங்களையும் கடந்து இறைவனை வணங்கு என்பதை இது நினைவூட்டும்.

கோயில் பிராகாரங்களைக் காலையில் வலம் வந்தால் நோய் நீங்கும். பகலில் வலம் வந்தால் விருப்பமளிக்கும். மாலையில் வலம் வந்தால் எல்லாப் பாவங்களும் போகும். அர்த்தசாமத்தில் வலம் வந்தால் மோட்சம் கிட்டும்.

**மூலவர் :**

கருவறையில் உள்ள சிவலிங்கமே மூலவர்.லிங்கம் என்பது ஓர் அடையாளமே.லிங்கம் என்பதை லிம் + கம் எனப் பிரிப்பர். லிம் என்றால் அண்ட சராசரங்கள் அனைத்தும் ஒடுங்குமிடம் என்றும் கம் என்றால் ஒடுங்கிய பொருள் மீண்டும் தோன்றுமிடம் என்றும் பொருள்.காண முடியாத இறைவனைக் காணும் ஒரு அடையாளமே சிவலிங்கம்.

லிங்கத்தின் அடிப்பாகம் பிரம்மபாகம் என்றும், ஆவுடையார் (நடுப்பாகம்) விஷ்ணுபாகம் என்றும், பானம் (மேல் குவளை) ருத்ரபாகம் என்றும் அழைப்பர். சிவலிங்கம் பல வகைப்படும்.தானே தோன்றியது சுயம்புலிங்கம். விநாயகர், ராமன், முருகன் போன்ற கணங்களால் ஸ்தாபிக்கப்பட்டது கணலிங்கம். இருடிகள் ஸ்தாபித்தது தைவீக லிங்கம், மனிதர்கள் செய்து வைத்தது மானுடலிங்கம் எனப்படும்.

சிவலிங்கத்தை வழிபட்டால் யாவற்றையும் வழிபட்டதாகப் பொருள்

கொள்ளப்படும். நினைத்தாலும், தரிசித்தாலும் அப்படியே.சிவலிங்க வழிபாட்டுப் பெருமையை 28 ஆகமங்கள் விரிவாகப் பேசுகின்றன.இக் கலியுகத்தில் சிவனுடைய சக்தியை அறியப் பாரெங்கும் பல இலட்சக்கணக்கான சிவத்தலங்கள் உள்ளன. ஒரே தலத்தில் பல விதமான லிங்கங்கள் உள்ளன.கலியுகத்திற்கு சிவஞானமே சிறந்த ஞானம்.

ஆலய வழிபாட்டின் நோக்கம் மிருகத்தன்மை ஒழிய வேண்டும். மனிதத் தன்மையும் அடங்க வேண்டும். தெய்வத் தன்மையை ஒளி வீசச் செய்ய வேண்டும் என்பதே.

**கோயிலில் சுவாமி தரிசனம் செய்யும்போது....!**

**கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகள்**

*ஆண்டவனின் சன்னிதானத்தினுள் நுழையும் போது கோயிலின் வாசலிலேயே நம் காலணியுடன் 'நான்' என்னும் அகந்தையையும் கழற்றி விட வேண்டும். அமைதியுடன் மனதை ஒருநிலைப்படுத்த வேண்டும். பேசுவதை அதிலும் அபசகுனமாகப் பேசுவதைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

*கோயிலினுள் நுழையும் போதுதான் தான தர்மங்களைச் செய்ய வேண்டும் - திரும்பி வரும் போது செய்யக் கூடாது .

* கோயிலை வலம் வரும் முன்பு நமஸ்காரம் செய்ய வேண்டும். தலையை விரித்துப் போட்டுக் கொண்டு கோயிலினுள் செல்லக்கூடாது. ஆண்களாக இருந்தால் தலைப்பாகையைத் தவிர்க்க வேண்டும்.

*நெற்றியில் பொட்டு ஏதும் இடாமல் செல்வதோ, வெறுங்கையுடன் செல்வதோ கூடாது.

*கோயிலில் தரப்படும் பிரசாதத்தை வலது கையினால் வாங்கி அப்படியே கைமாற்றாமல் வலது கையால் உண்ண வேண்டும்.

*சன்னதியில் நின்று ஒருபோதும் கண்ணீர் விடுவதோ அழுவதோ கூடாத ஒன்று. ஆண்டவன் முன்பு நின்று அழுதுதான் கேட்க வேண்டுமென்பது தவறான கருத்து.

*கர்ப்பகிரகத்தில் சுவாமி அலங்காரத்துக்காகத் திரை போட்டிருக்கும் நேரத்தில் சுவாமி தரிசனம் செய்யக்கூடாது.

*கோயில் உள்ளே அமர்ந்து தேவையில்லாமல் விவாதம் செய்வது மார்பிலோ, தலையிலோ அடித்துக் கொள்வது போன்றவைகள் கூடாது.

*கோயிலினுள் பிற மனிதர்களை வணங்குவதும் - வாழ்த்துவதும் கூடாது. தவறு செய்தவர்களைத் தண்டிப்பதும் கூடாது.

*மனதை ஒரு நிலைப்படுத்தி தியானம் செய்தபடியே கோயிலை வலம் வர வேண்டும். வேறு சிந்தனைகள் கூடாது.

நியாயமான வேண்டுதல்களை ஆண்டவன் முன் வைக்க வேண்டும். நல்ல மனதுடன் 'அவனை' தியானம் செய்தால் நிச்சயம் அவன் தேடி வந்து நம்முள் குடிபுகுவான். நல்ல மனம்தானே நாளும் 'அவன்' தங்கியிருக்கும் கோயில்!

**யோகங்கள் ;**

எல்லா அதிருஷ்டங்களும் துரதிஷ்டங்களும் நமது முன் ஜன்ம வினைப்பயனே! இந்த வினைப்பயன்களைச் சரிவர நடத்துவது நமது கோள்கள் தான். அந்தக்கோள்களையும் நடத்திவைப்பது அந்த இறைவன்தான்.

கடவுளின் அருள் இருக்க வினைப்பயன்களும் மாற வாய்ப்பு இருக்கிறது. வாழ்க்கையில் நடக்கும் நன்மை தீமைகள் அனைத்தும் கண்களுக்குத்தெரியாத ஒரு சக்தியின் மூலமே நடக்கிறது சின்னப்பூச்சியிலிருந்து ஆறறிவு மனிதன் வரை அவனது திருவிளையாடல் நடந்து வருகிறது. அதிலிருந்து தப்பவே முடியாதா என்று கேட்கலாம். இதிலிருந்து தப்ப அந்தச்சக்தியை உணர்ந்து போற்றி, சமர்ப்பணம் செய்து, எல்லா காரியங்களையும் அவன் நடத்திக்கொடுப்பதுப் போல் உணர்ந்தால் வாழ்க்கையின் நிலமை மாறும் .தவிர பரிகாரம் என்ற ஒன்றும் மிகவும் சிரத்தையாகச் செய்ய நாம் தீமையிலிருந்து விடுபட முடியும்.

ஜோசியத்தில் முக்கியமான ஒன்பது யோகங்கள் உண்டு. ராஜ யோகம், பாத்திர யோகம், ஹம்ஸ யோகம், ருசுக யோகம், அனபயோகம், சுனப யோகம், மாளவி யோகம், சக்கர்யோகம், கஜகேசரி யோகம்.

யோகம் என்றால் இரு கிரகங்களின் சேர்க்கை அல்லது பார்வை. அவைகள் இருக்கும் இடங்கள் ,,.இவைகளைக்கொண்டுச் சொல்லப்படுகிறது.

இந்த யோகங்களில் ஜாதகருக்கு எந்தப் பலனையும் கொடுக்காமல் சக்தியை இழக்க வைக்கும் ஒரு யோகம் "காலசர்ப்ப யோகம்" அதாவது ராகு கேது இருவருக்கும் இடையே மற்ற கிரகங்கள் மாட்டிக்கொண்டு விட்டால் "காலசர்ப்ப யோகம்" வந்துவிடுகிறது.

நடுவில் இருக்கும் கிரகங்கள் உச்சமாக இருந்தாலும் சரி ஆட்சியாக இருந்தாலும் சரி அவைகளின் சக்தி சிறிது குறைந்து விடுகிறது. இதனால் கிடைக்க வேண்டிய முழுபலன்கள் கிடைப்பதில்லை. இந்த ஜாதக அமைப்பில் முப்பது வயதுக்கு மேல் நல்ல பலன் கிடைக்கும் நல்ல யோகம் கிட்டும். ஆனால் இவர்கள் ஆரம்ப வயதில் கொஞ்சம் போராட்டம் பார்க்கத்தான் வேண்டியிருக்கிறது.

இது அமைந்திருக்கிற லக்னத்தைப் பொருத்தும் நடந்துவரும் தசாபுக்திகளைக்கொண்டும் தெரிந்துக்கொள்ள முடியும்.

கிரகங்களில் ராகு மிகவும் வலிமையானவர். கொடுக்கும் நேரம் வந்தால் அதிருஷடம் இவரால் கூரையைப் பொத்துக்கொண்டு வரும். அதேபோல் பெரிய பணக்காரனை ஓட்டாண்டியாக்கவும் அவருக்கு முடியும். அப்படிப்பட்ட ராகு ஜாதகத்தில் நல்ல இடத்தில் அமைந்துவிட்டால் ஆண்டியும் அரசனாவான்.

இந்தக்காலசர்ப்ப தோஷத்திற்கும் ஜாதகத்தில் 2, 5, 7, 8 போன்ற இடத்தில் நின்று ராகு கெட்டிருந்தாலும் பரிகாரம் செய்ய வேண்டிய இடம் திருநாகேச்வரம். காளஹஸ்தி, திருப்பாம்புரம் காஞ்சிபுரத்தில் இருக்கும் மஹாகாளேச்வர் கோயில் போன்ற இடங்கள்.

&&&&&&&&&&&